## 1) <u>மழைக் கால தூறல்கள்!</u>

ஜன்னலுக்கு வெளியே பெரும் மழை

என் மனதுக்குள் உன் நினைவுகள்

நர்த்தனம் ஆடுகின்றன..

இதேபோல் ஒரு மழைநாளில்

சொட்ட சொட்ட வடிந்திட்ட உன் காதலை

மென்மையாய் என் கரங்களில் பிடித்து

அழகு பார்த்தேன் ...

நினைவு திரையில் நம் உரையாடல்கள்

சங்கீதமாய் என் காதுகளில்

ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன ...

கவிதையாக என்னோடு நீ வலம் வந்த

ஒவ்வொரு நாளின் நிமிடங்களும்

வண்ண ஓவியங்களாய் என் கண் முன்னே

நிழலாடுகின்றன ...

வேறொரு மழை நாளிலும்

இதே எண்ணங்கள்  மீண்டும் வந்து

என்னைத் தீண்டி செல்லும்...

இதே உணர்வோடு நானும்

உன் நினைவுகளை

சளைக்காமல் புரட்டி பார்ப்பேன்!

## 2) <u>பார்வை…!</u>

அம்மா…

உந்தன் கருவறையில்

பத்து மாதங்கள்

பத்திரமாய் எனை பாதுகாத்து

பத்தியமாய் உனை வருத்தி

சித்திரமாய் எனை சேர்த்தாய்

இப்பூவுலகில்!

பசித்து அழுதேன்,

பாலாக உன்னை

பருக தந்தாய்…

உறங்க அழுதேன்,

உன் சுமையோடு என்னையும்

சேர்த்தே சுமந்தாய்…

சோர்வாய் அழுகையில்,

நீ என் பொம்மையாய்

என் கைகளில் மாறினாய்

என்

அசைவுகளின்

அர்த்தங்கள் அறிந்த

அகராதி நீ…

எனக்காய் நீ தாங்கிய

ஏராளம் சுமைகளை

என்று நான் உனக்காய்

சுமந்து தீர்ப்பேன்...?

இப்பிறவியில்

நான் பட்ட கடன்

என்று தீர்ப்பேன்...

இறைவனிடம் இன்னுமொரு

ஜென்மம் கேட்பேன்...

உனது பார்வையாய்

கண்ணின் மணியாய்

வலம் வரும் வரம் கேட்பேன்,

புதியதோர் உலகை

உனக்கு காண்பித்து

நானும் களித்திருப்பேன்!

3) <u>**சின்னஞ் சிறு சிறகுகள்!**</u>

செல்வமே...

பேனா பிடிக்க வேண்டிய

பிஞ்சு விரல்கள்

செங்கல் தாங்கி

சிவந்து போனது...

செங்களோடு நீ

சேர்த்து சுமப்பது

கயவர்களின்

கல்மன சுமையும் தான்...!

இந்த சின்ன பூ,

வெயிலின் வெப்பத்தில்

வாடிப்போகும்போது

பாரதியின் கனவுகளும் தான்

வதங்கி வடிவற்று போனது…!

உன் கன்னங்கள்

கண்ணீரால் ஈரமான போது

மண்ணின் மேல் மழை

பொய்த்து போனது…!

ஆனாலும்

உன் மனவெளியை விடவா

இந்த மன்வெளி

வறண்டு போனது...?

உணர்வற்று போனது

ஒரு குழந்தையின்

உயிருள்ள ஆசைகள்

உயர வளர்ந்தது

கயவர்களின்

கசப்பான கனவுகள்...

இந்த பறவைக்கு

பறக்கக் கற்றுக்கொடு,

சிறகை அறுத்து

சிறைக்குள் தள்ளாதே

அழிந்து போவது

ஒரு ஒற்றை கனவு மட்டும் அல்ல

ஒரு மொத்த மானுடம்

ஒரு மொத்த மானுடம்...!!

## 4) மீண்டும் வருவேன்!

உறங்காத ஒவ்வொரு

இரவுகளிலும்

உன் நினைவுகளோடு

நடக்கிறேன்…

கனவுகளில் நகர்கின்ற

காட்சிகளில்

எனதுலகம் நீயென

உணர்கிறேன்...

மௌனமான தென்றல்

மெதுவாய் கடக்கையில்

இதயங்கள் இரகசியமாய்

பேசிய பாஷைகளை

இரசிக்கிறேன்...

பிறந்து விட்ட காரணத்தால்

நானும் வாழ்கிறேன்,

விடைபெறும் நேரத்திலும்

உன் நினைவுகளோடு

விடைபெறுவேன்...

மீண்டும் வந்து பிறந்திட்டால்…

தேடி வருவேன்,

என் இதயத்துடிப்பை

நாடி வருவேன்!

5) ***சீற்றம்***

இயற்கை அன்னை

அழுது கொண்டிருக்கிறாள்…

அவள்

அழுகையின் வெப்பத்தில்

அதிர்கிறது பூமி...

மின்னலின் மின்சாரமாய்

இடியின் வெடிச் சத்தத்துடன்

எங்கோ விழுந்து எரித்துப் போனாள்...

கோபக் கனலான மூச்சுக்காற்றால்

வேர்களின் விலாசத்தை

வேரறுத்துக் கொண்டு

சுறாவளியாய் சுழன்று போனாள்...

அவளின் கண்ணீர் துளிகளாய் மண்ணில் விழுந்து

பூமியின் உடலை முழுவதாய் நனைத்து

ஆறாகி அருவியாகி பெருகிப் பெருக்கெடுத்து

பசியோடு உயிர்களை விழுங்கிப் பாய்ந்தாள்...

அறம் மறந்த மனிதர்களால்

மனம் வெறுத்தாள் அன்னை…

மதம் பிடித்த கயவர்களால்

சினம் கொண்டாள் அன்னை…

வக்கிர மனங்களில்

சிக்கி உழன்றாள் அன்னை…

கண்ணகி சாபம்

மதுரையை அழித்தது…

இம்மண்ணையே அழிக்குதோ

பூ அன்னை அவள் சாபம்!

## 6) <u>தொலைந்துபோன முகவரிகள்!</u>

ஒரு பாதி ஆணாய்

மறு பாதி பெண்ணாய்

அடையாளங்கள்

தொலைந்து போய்,

அடிபட்ட காயங்கள்

வடுக்களாய்,

வாழ்க்கையின் கோடுகள்

வளைந்து போய்,

கோலங்களாகாத

புள்ளிகளாய்

இறைவனின் சிற்பி

உறங்கிப் போய்

இரவினில் படைத்த சிற்ப்பமாய்

உடைந்த சில்லில்

பல முகம் கண்டு,

தன் முகம் அதில்

எதுவென்று தேடி,

முகத்தால் மனம் மறைத்து

முகவரி தொலைத்த…

கங்கையின் தங்கை

இத் திரு நங்கை…!

## 7) <u>முடியாத பயணங்கள்…</u>

கண்ணீரின் துணையோடு

காலாற நடக்கிறேன்,

ஈரமான தென்றல்

மேலும் என் நினைவுகளை

ஈரமாக்கியது..

நேற்றைய என் கனவுகள்

மெல்ல மெல்ல என்னைவிட்டு

விலகிச் செல்கின்றன,

பாதைகள் மாறுகின்றன,

பயணங்கள் தொடர்கின்றன..

தொடர்ந்து நடக்கிறேன் ..

நேற்று தொலைத்த

என் தூக்கத்தைத் தேடி ..

ஒரு புதிய கனவு…

ஒரு தெளிந்த பாதை

மீண்டும்

ஒரு வசந்தகாலம்

என் வாசலைத் தேடி...

வருமா??

நடந்துகொண்டிருக்கிறேன்...

நம்பிக்கையின் துணையோடு!

8) <u>மரணத்தின் ஓலம்!</u>

படபடக்கும் இதய துடிப்போடு

ஓலமிட்டு கதறும் எண்ணங்களோடு

நீ வருகிறாய்

உன்னை வரவேற்க முடியாமல்

உறைந்து  உறங்குகிறேன் நான்...

துவண்ட கைகளில்

எனக்கான வண்ண மலர்களை

ஏந்தி வந்திருக்கிறாய்

நுகர முடியா சூழ்நிலையில்

நகர முடியாமல் நான்...

பொல பொலவென உதிரும்

உன் கண்ணீர் சிதறல்கள்

ஜில்லென்ற என் பாதத்தில்

தெறித்து விழுந்தன

உதிர்ந்த பூவுக்கு

நீர் எதற்கு?

என் பிரிவின் வலியை

எனக்கே உணர்த்துகிறாய்,

உன் பிரியமானவளை

பிரியாதிருக்க நினைக்கிறாய்,

முடிந்துபோன கணக்கை

மீண்டும் எண்ணுகிறாய்…

என் பயணத்தின் முடிவில்

இன்னொமொரு பயணத்தை

தொடங்குகிறேன்…

உடல் மறைந்தாலும்

என் நினைவுகளை உனக்காய்

விட்டுச் செல்கிறேன்…

உயிரே கலங்காது விடைக்கொடுத்திடுவாய்!